# நமது தின கனி

காலை நாளிதழ்

NAMADHU DHINA KANI Daily Morning

| Vol : 01 | Issue : 84 | 4 Pages | 26.10.2023 | Thusday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 | Tiruppur |
|---|---|---|---|---|---|---|---|
| மலர் : 01 | இதழ் : 84 | 4 பக்கங்கள் | 26.10.2023 | வியாழக்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 | திருப்பூர் |


## உயர்ந்த பதக்கங்களை வென்ற இந்தியர்கள்: பைடன் வழங்கினார்



அமெரிக்கா, அக்.26

1973 கான்பூர் இந்திய தொழில்நுட்ப கழகத்தில் பவுதிகத்தில் முதுநிலை பட்டம் பெற்றவர் 63 வயதான அசோக் கேட்கில் (Ashok Gadgil). இவர் அமெரிக்காவில் உள்ள கலிபோர்னியா பல்கலைகழகத்தில்பவுதிகத்தில் முனைவர் பட்டமும் பெற்றார்.

1993ல் இந்தியாவில் ஏற்பட்ட காலரா தொற்றுநோய் பாதிப்பை கண்ட கேட்கில், புற ஊதா கதிர் மூலமாக குடிநீரை சுத்திகரிப்பு செய்யும் சாதனத்தை கண்டுபிடித்தார். வளர்ந்து வரும் நாடுகளில் தூய்மையான குடிநீர் கிடைப்பதற்காக பல ஆராய்ச்சிகளை மேற்கொண்டு வருபவர், கேட்கில்.

இவரை போன்ற மற்றொரு ஆராய்ச்சியாளர் அமெரிக்காவின் புகழ் பெற்ற எம்.ஐ.டி. (MIT) பல்கலைகழகத்தில் முனைவர் பட்டம் பெற்றவர் 66 வயதான டாக்டர். சுப்ரா சுரேஷ் (Dr. Subra Suresh). பொறியியல் படிப்பிற்கான பிரவுன் பல்கலைகழகத்தில் பேராசிரியராக உள்ளார்.

இந்தியவம்சாவளியைசேர்ந்தஇருவருக்கும்அமெரிக்காவில்அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்திற்கான உயர்ந்த விருதான தேசிய பதக்கம் (National Medal of Sciences) கிடைத்துள்ளது. மனிதகுலத்திற்கு இன்றியமையாத அறிவியல் மற்றும் தொழில்நுட்ப மேம்பாடுகளில் இவர்கள் காட்டிய அர்ப்பணிப்பிற்காக இந்த பதக்கங்கள் வழங்கப்படுவதாக வெள்ளை மாளிகை அறிவித்தது.

இருவருக்கும் இந்த பதக்கங்களை அமெரிக்க அதிபர் ஜோ பைடன் வழங்கினார்.

## பெண்கள் வேலை நிறுத்தம் தானும் இணைந்த பெண் பிரதமர்



வட ஐரோப்பியா, அக். 26

வட அட்லான்டிக் பகுதியில் உள்ள வட ஐரோப்பிய நாடு, ஐஸ்லேண்டு (Iceland). இதன் தலைநகர் ரெக்ஜேவிக் (Reykjavik). "லேண்ட் ஆஃப் ஃபையர் அண்ட் ஐஸ்" (land of fire and ice) என அழைக்கப்படும் இந்நாடு, சுமார் 4 லட்சம் பேரை கொண்ட தனித்தீவு நாடாகும்.

எரிமலை, பனிப்பாறைகள் என இயற்கை அழகுக்காக புகழ் பெற்ற சுற்றுலா தலமான ஐஸ்லேண்டில் ஆண்கள் பெறும் ஊதியத்தை விட 21 சதவீதம் குறைவாகவே பெண்கள் ஊதியம் பெறுகின்றனர். சுகாதார பணிகள், தூய்மை பணிகள் மற்றும் குழந்தைகள் பராமரிப்பு உள்ளிட்ட பல பணிகளில் பெண்களுக்கு ஊதியம் இன்னும் குறைவாக உள்ளது. 1975லிருந்து இது குறித்து 7 முறை போராட்டங்கள் நடத்தியும் அரசாங்கம் இவர்களின் கோரிக்கைகளை நிறைவேற்றவில்லை.

இந்நிலையில், சில நாட்களுக்கு முன் அந்நாட்டில் பெண்கள் அமைப்பினர் மீண்டும் ஒரு நாள் வேலை நிறுத்தத்திற்கு அழைப்பு விடுத்திருந்தனர். இதை தொடர்ந்து நேற்று, இந்நாட்டின் தலைநகரில் உள்ள அர்னார்ஹால் (Arnarholl) மலை மற்றும் பல முக்கிய நகரங்களில் ஆயிரக்கணக்கான பெண்கள் ஆண்களுக்கு நிகராக ஊதியம் கோரி போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இப்போராட்டத்தின்விளைவாகபெண்கள்ஈடுபட்டுவந்தபள்ளிக்கூடங்கள், கடைகள், வங்கிகள், நீச்சல் குளங்கள் உள்ளிட்ட பல பணிகள் அந்நாட்டில் ஸ்தம்பித்து விட்டன. இப்போராட்டத்திற்கு அந்நாட்டின் பெண் பிரதமர் கேத்ரின் ஜேகப்ஸ்டாட்டிர் (Katrin Jakobsdottir) ஆதரவு தெரிவித்து, பணிக்கு செல்லாமல் தனது வீட்டிலேயே இருந்து கொண்டு வேலை நிறுத்தம் செய்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## இரவு வானில் ஒரு கண்கொள்ளா காட்சி: பறவைகளாக மாறிய டிரோன்கள்



அமெரிக்கா, அக். 26

அமெரிக்க மாநிலம் நியூயார்க் நகரில் மன்ஹாட்டன் பகுதியில் 843 ஏக்கர் நிலப்பரப்பில் உள்ளது புகழ் பெற்ற சென்ட்ரல் பார்க் (Central Park). நியூயார்க் நகரின் ஐந்தாவது மிக பெரிய பூங்கா இது என்பது குறிப்பிடத்தக்கது.

இங்குள்ள ஏரிக்கு அருகே சனிக்கிழமை இரவு ட்ரிஃப்ட் (DRIFT) எனும் டச்சு ஸ்டூடியோ ஒன்றினால் "பிரான்சைஸ் ஃப்ரீடம்" (Franchise Freedom) எனும் பெயரில்நடத்தப்பட்ட ஒருகண்கவர்நிகழ்வு உலகமெங்கும் பேசுபொருளாகி வருகிறது.

இந்த நிகழ்ச்சியில், இரவு வானில் 1000 டிரோன்கள் ஒரே நேரத்தில் பறக்க விடப்பட்டன. அந்த டிரோன்களை இயக்குபவர்களால் வானில் பறந்த அவை, பல கலை வடிவங்களை காண்பிக்கும்படி பறக்க விடப்பட்டது.

10 நிமிட இடைவெளியில் ஒரு குறிப்பிட்ட வடிவத்தில் பறந்த இவை, இது போல் 3 முறை பல வெவ்வேறு விதமான வடிவங்களை வானில் வெளிப்படுத்தின. ஒவ்வொரு டிரோனில் இருந்தும் வரும் சிறு ஒளி ஒட்டு மொத்தமாக 1000 டிரோன்களில் இருந்து பெரும் நட்சத்திர கூட்டம் போன்று வானில் தெரிந்தது.

இந்த டிரோன்கள், வானில் பல வடிவங்களில் பறவை கூட்டம் போல் நேர்த்தியாக பறக்க விடப்பட்டது காண்போரை மிகவும் பரவசப்படுத்தியது.

"மனிதன், இயற்கை மற்றும் தொழில்நுட்பம் ஆகிய மூன்றிற்கும் இடையே உள்ள தொடர்பை ஆய்வு செய்யும் ஒரு முயற்சி இது. கவித்துவமான இந்த நிகழ்வு, மனிதர்களாக நாம் ஒரேசமூகமாக சட்டதிட்டங்களுக்கு கட்டுப்பட்டு வாழ்வதை உணர்த்துகிறது" என தங்கள் அதிகாரபூர்வ வலைதளத்தில் இந்த நிகழ்ச்சி குறித்து ட்ரிஃப்ட் அமைப்பு தெரிவித்துள்ளது.

இரவு நேர பறவைகள், பறக்கின்ற வழித்தடங்களுக்கு இந்த நிகழ்ச்சியினால் எந்த தடையும் ஏற்படாது என விலங்குகள் மற்றும் பறவைகள் நல அமைப்புகளுடன்கலந்து ஆலோசித்த பிறகே இது ஏற்பாடு செய்யப்பட்டதாக டிரிஃப்ட் அமைப்பினர் தெரிவித்தனர்.

ஒரே சமயத்தில் இத்தனை டிரோன்கள் வானில் பறக்கும் நிகழ்வு, சமூக வலைதளங்களில் பரவி வருகிறது.

# அரசு ஊழியர்கள், ஆசிரியர்களுக்கு 4 சதவீதம் அகவிலைப்படி உயர்வு: முதமைச்சர் அறிவிப்பு

சென்னை, அக். 26

தமிழக அரசு வெளியிட்டுள்ள அறிவிப்பில் கூறியிருப்பதாவது:

மக்கள் நலனுக்காக அரசு வகுக்கும் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தும் அரும்பணியில் அரசோடு இணைந்து பணியாற்றும் அரசு அலுவலர்கள் மற்றும் ஆசிரியர்களின் நலனை இந்த அரசு தொடர்ந்து பாதுகாத்து வருகின்றது.

முந்தைய அரசு விட்டுச் சென்ற கடும் நிதி நெருக்கடி மற்றும் கடன் சுமைக்கு இடையேயும், அரசு அலுவலர்கள் மற்றும் ஆசிரியர்களின் பல்வேறு கோரிக்கைகள் குறித்து வாக்குறுதிகளைப் படிப்படியாக நிறைவேற்ற முனைப்புடன் இந்த அரசு செயல்பட்டு வருகின்றது.



அவ்வகையில், அரசு அலுவலர்கள் மற்றும் ஆசிரியர்கள் தொடர்ந்து வலியுறுத்தி வரும் கோரிக்கையை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கனிவுடன் பரிசீலித்து, ஒன்றிய அரசு பணியாளர்களுக்கு அகவிலைப்படி உயர்வை அறிவிக்கும் போதெல்லாம் உடனுக்குடன் தமிழ்நாடு அரசும் அதை பின்பற்றி அரசு அலுவலர் மற்றும் ஆசிரியர்களுக்கும் அகவிலைப்படி உயர்வு செயல்படுத்தப்படும் என்று ஏற்கனவே வெளியிட்ட அறிவிப்பைத் தொடர்ந்து, தற்போது 42 சதவீதமாக உள்ள அகவிலைப்படியை 1.7.2023 முதல் 46 சதவீதமாக உயர்த்தி வழங்கிட தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் உத்தரவிட்டுள்ளார்.

இந்த அகவிலைப்படி உயர்வால் சுமார் 16 லட்சம் அரசு அலுவலர்கள், ஆசிரியர்கள், ஓய்வூதியதாரர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியதாரர்கள் பயன்பெறுவார்கள்.

இதனால் ஆண்டு ஒன்றுக்கு அரசுக்கு ரூ.2,546.16 கோடி கூடுதல் செலவினம் ஏற்படும். எனினும், அரசு அலுவலர்கள், ஆசிரியர்கள் மற்றும் ஓய்வூதியதாரர்கள் நலன் கருதி இதற்கான கூடுதல் நிதியை அரசு ஒதுக்கீடு செய்யும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## அதிக மகசூல் தரும் புளிய மரக்கன்றுகள் அடுத்த ஆண்டு விவசாயிகளுக்கு வழங்கப்படும் : வன மரபியல் அதிகாரி தகவல்

திருப்பூர், அக். 26

இந்திய வன மரபியல் மற்றும் மரப்பெருக்கு நிறுவன விஞ்ஞானிகள், அதிக மகசூல் தரும் இனிப்பு, புளிப்பு, சிவப்பு ஆகிய புளிய மரக்கன்றுகளை உருவாக்கியுள்ளனர். இவை அடுத்தாண்டு விவசாயிகளுக்கு வழங்கப்பட உள்ளன.

இதுகுறித்து கோவை, இந்திய வன மரபியல் மற்றும் மரப்பெருக்கு நிறுவன விஞ்ஞானி, முனைவர் மாயவேல் கூறியதாவது:

இனிப்பு புளி, புளிப்பு புளி, சிவப்பு புளி என, மூன்று வகை புளிய மரங்கள் உள்ளன.நாடு முழுதும் நடந்த 30 ஆண்டு ஆய்வு மற்றும் ஆராய்ச்சிக்கு பின், அதிக மகசூல்கொடுக்கும்புளியமரநாற்றுகள், மரபு பண்ணையில் உருவாக்கப்பட்டுள்ளன. இதனால், அழியும் தருவாயில் உள்ள இவ்வகை மரங்கள் இனி காப்பாற்றப்படும்.

நீளமான காய், அதிக மகசூல் கொடுக்கும் புளிப்பு சுவை மிக்க புளிய மரக்கன்றுகளை, மரபுப்பண்ணையில் உருவாக்கி வைத்துள்



ளோம். ஐந்து முதல், ஆறு ஆண்டுகளில் காய் பிடிக்க துவங்கும். பொது இடங்களில் நட்டு வளர்த்தால், உள்ளாட்சி நிர்வாகங்களுக்கு வருவாய் கிடைக்கும். ஆறு மற்றும் குளக்கரையோரம் நட்டு, இரண்டு ஆண்டுகள் மட்டும் பராமரித்தால் போதும். நிலையான வருவாய் கொடுக்கும். ஒரு மரம், 100 கிலோ அளவுக்கு புளியைமகசூல்செய்யும்.100கிலோ காயில், 42 கிலோ புளி கிடைக்கும். ஒரு மரத்தில் இருந்து ஆண்டுக்கு 4,500 ரூபாய் வரை வருவாய் கிடைக்கும்.

இனிப்பு புளி மகசூல் குறைவாக இருந்தாலும், அதிக வருவாய் கிடைக்கும். இவ்வகை புளி, ஒட்டுடன், கிலோ 300 ரூபாய்க்கு கொள்முதல் செய்யப்படுகிறது. சாதாரண புளிக்கு, கிலோவுக்கு, 20 ரூபாய் மட்டும் தான் விவசாயிகளுக்கு கிடைக்கிறது.

சிவப்பு புளி சாப்பிட்டால், உடலில் நோய் எதிர்ப்பு சக்தி கிடைக்கும். தமிழகத்தின் பல்வேறு கோவில்களில், சிவப்பு புளிய மரங்களை முன்னோர்கள் வளர்த்துள்ளனர். ஆந்திராவில் உள்ள சர்ச், டில்லியில் உள்ள மசூதிகளிலும் சிவப்பு புளிய மரங்கள் வளர்க்கப்பட்டுள்ளன.மரங்களைபாதுகாக்கவேண்டி, வழிபாட்டுதலங்களில்நட்டுவளர்த்துள்ளனர்.

இதேபோல், அதிக எண்ணெய், கசப்பு தன்மை உள்ள, நிலையான காய்ப்பு தன்மையுடன் கூடிய வேப்பமரக்கன்றுகளையும் உருவாக்கியுள்ளோம். தற்போது உருவாக்கப்பட்டுள்ள நாற்றுகளை சோதனை அடிப்படையில் திருப்பூரில், 'வனத்துக்குள்திருப்பூர்' திட்டம் வாயிலாக நட்டுள்ளோம். அடுத்த ஆண்டு முதல்விவசாயிகளுக்குகிடைக்கும்.

இவ்வாறு அவர் கூறினார்.

## பல்லடத்தில் பெண் தூக்குப்போட்டு தற்கொலை

பல்லடம், அக். 26

திருப்பூர் மாவட்டம் பல்லடம் திருப்பூர் மெயின் ரோடு கரையான் புதூர் பகுதியில் வசித்து வருபவர் முருகேஷ். இவரது மனைவி மோகனப்பிரியா (33). கணவன் மனைவி இருவரும் பனியன் நிறுவனத்தில் டெயிலர்களாக வேலை பார்த்து வருகின்றனர். இவர்களுக்கு 8 வயதில் பெண் குழந்தை உள்ளது. இந்த நிலையில் நேற்று (செவ்வாய்க்கிழமை) அதிகாலை மோகனப்பிரியா வீட்டில் சேலையால் தூக்கு போட்டு தொங்கியநிலையில்இருந்துள்ளார்.

இதனைப் பார்த்து அலறி துடித்த அவரது கணவர் முருகேஷ், இதுகுறித்து பல்லடம் போலீசாருக்கு தகவல் அளித்தார். தகவலறிந்து சம்பவ இடம் விரைந்து வந்த போலீசார், மோகனப்பிரியாவின் உடலை மீட்டு, திருப்பூர் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். மேலும் தற்கொலைக்கான காரணம் குறித்து போலீசார் விசாரணை நடத்தி வருகிறார்கள்.

## உடுமலை நகராட்சி பூங்காவை சீரமைக்க பொதுமக்கள் கோரிக்கை

உடுமலை, அக். 26

திருப்பூர் மாவட்டம் உடுமலை நகராட்சிக்கு உட்பட்ட அன்னபூரணி நகரில் நகராட்சிக்கு சொந்தமான பூங்கா உள்ளது. இங்குஅழகியவண்ணமலர்கள்கொண்ட செடிகள் வளர்க்கப்பட்டு, பராமரிக்கப்பட்டு வந்தன.



தற்போது இந்த பூங்கா பராமரிப்பு இல்லாத நிலையில் வறண்டு, புதர்கள் நிறைந்தும், குப்பைகளும் பிளாஸ்டிக் கழிவுகளும் அதிக அளவில் மண்டி கிடக்கிறது.

மேலும் இந்த பூங்காவிற்குள் அந்த பகுதியில் சேகரிக்கப்படும் குப்பைகளை தொட்டியில் கொட்டி வைத்து அதை மக்க வைத்து இயற்கை உரம் தயாரிக்க திட்டமிடப்பட்டு சுமார் 3 ஆண்டுகளுக்கு முன்பு இரண்டு தொட்டிகள் கட்டப்பட்ட மேற்கூரையும் அமைக்கப்பட்டு இருந்தது.

ஆனால் இந்த திட்டம் செயல்படுத்தப்படாமல் அந்த பகுதியில் புதர்கள் நிறைந்து மண்டிக்கிடக்கிறது. இதனால் பூங்காவில் விஷ ஜந்துக்கள் நடமாட்டம் அதிக அளவில் இருப்பதாகவும், அவைகள் அந்த பகுதியில் உள்ள குடியிருப்பு பகுதிகளுக்குள் புகுந்து விடுவதாகவும் பொதுமக்கள் அச்சமடைந்துள்ளனர்.

ஆகவே சம்பந்தப்பட்ட நகராட்சி அதிகாரிகள் உடனடியாக இந்த பூங்காவிற்குள் வளர்ந்துள்ள செடி, கொடி, புதர்களை அகற்றி விட்டு, அழகிய வண்ண மலர்கள் கொண்ட செடிகள் அமைத்து, பராமரிக்க வேண்டும் என்று அப்பகுதி பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.




# ஈட்டி வீரம்பாளையம் ஊராட்சியில் ரூ.75 லட்சத்தில் வளர்ச்சி திட்ட பணிகள்: கே.என்.விஜயகுமார் எம்.எல்.ஏ. தொடங்கி வைத்தார்

திருப்பூர், அக். 26

திருப்பூர் ஊராட்சி ஒன்றியம், ஈட்டிவீரம்பாளையம் ஊராட்சிக்குட்பட்ட பகுதிகளில் ரூ.76 லட்சத்து 30 ஆயிரத்தில் பல்வேறு வளர்ச்சி திட்ட பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளன.

இதன்படி மொய்யாண்டபாளையம் பகுதியில் ரூ.2 லட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட தரை மட்ட நீர்தேக்க தொட்டி ரூ.18 லட்சத்து 50 ஆயிரத்திலும், தட்டான்குட்டை, ஜே.நகர் பகுதியில் 22 லட்சத்து 80 ஆயிரத்திலும், புதிய தார்சாலை, அப்பியாபாளையம் ரங்காநகர் பகுதியில் ரூ.21 லட்சத்திலும் புதிய தார்சாலை,



எஸ்.எஸ்.நகர் ஆரம்பப் பள்ளி அருகில் ரூ.14 லட்சத்தில் அங்கன்வாடி மைய புதிய கட்டிடம் உள்ளிட்ட பணிகள் நடைபெற உள்ளது. இதற்கான பூமிபூஜை விழா நடைபெற்றது.

இதில் திருப்பூர் வடக்கு தொகுதியும், அ.தி.மு.க. திருப்பூர் ஒன்றிய செயலாளருமான கே.என்.விஜயகுமார் பணிகளை தொடங்கி வைத்தார். இதில் மாவட்ட கவுன்சிலர் சாமிநாதன், பேரவை ஒன்றிய செயலாளர் பழனிச்சாமி, ஊராட்சி மன்ற தலைவர் ராதாமணி சிவகாமி, மாவட்ட வர்த்தக அணி தலைவர் சுப்பிரமணியம், முன்னாள் சேர்மன் தங்கராஜ், ஒன்றிய பொருளாளர் சிவசாமி, ஒன்றிய கவுன்சிலர் ஐஸ்வர்ய மஹராஜ், ஊராட்சி துணைத்தலைவர் ராஜாமணி கந்தசாமி, நிர்வாகி ராம்குமார், மாவட்ட வக்கீல் பிரிவு சித்ரா, சொசைட்டி முன்னாள் தலைவர் கிட்டுசாமி, வார்டு உறுப்பினர்கள் முருகேஷ்குமார், ராசப்பன், அருண், யுவராஜ், சரவணன், இந்து முன்னேற்ற கழக பொதுச்செயலாளர் எம்.எஸ்.செந்தில்குமார் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

# திருப்பூர் பள்ளிகளில் வித்யாரம்பம் நிகழ்ச்சி

திருப்பூர், அக். 26

விஜயதசமி அன்று எந்த ஒரு காரியத்தை துவக்கினாலும் அது வெற்றிகரமாக முடியும் என்பதன் காரணமாக, பெற்றோர்கள் தங்களது குழந்தைகளை விஜயதசமி அன்று பள்ளிகளில் சேர்ப்பது வழக்கம். அதன்படி விஜயதசமி நாளில் திருப்பூர் கிட்ஸ் கிளப் பள்ளியில் பெற்றோர்கள் தங்களது குழந்தைகளை சேர்த்தனர்.

இதையடுத்து அவர்கள் தங்கள் வாழ்வில் ஏற்றமும், வளமும் பெற்று என்றும் சிறப்புடன் விளங்க பெற்றோர்கள், பள்ளித்தலைவர் மோகன் கே. கார்த்திக், தாளாளர் வினோதினி, பள்ளி முதல்வர் நிவேதிகா, இயக்குனர் ஐஸ்வர்யா நிகில் சுரேஷ் மற்றும் ஆசிரியர்கள் வாழ்த்தி வரவேற்றனர்.

திருப்பூர் வீரபாண்டி பிரிவு விருக்சா சர்வதேசப் பள்ளியில் விஜயதசமியை முன்னிட்டு பள்ளி தாளாளர் ராஜலட்சுமி மற்றும் பள்ளி நிர்வாக இயக்குனர் கோவிந்தராஜன் முன்னிலையில் வித்யாரம்பம் நிகழ்ச்சி நடைபெற்றது. கோவை குருக்கள் ராம்குமார் கணபதி ஹோமம் வளர்த்து நிகழ்ச்சியை தொடங்கி வைத்தார். குழந்தைகள் தங்கள் பெற்றோர்களுடன் அமர்ந்து சரஸ்வதி ஸ்லோகம் கூறியும் அரிசியில் ஓம், அ, A ஆகியவற்றை எழுதியும் புதிதாக தங்கள் கல்வியை வித்யாரம்பம் மூலம் தொடங்கினர்.



திருப்பூர் மாவட்டம் அவினாசி வட்டம் பெருமாநல்லூரில் உள்ள கே.எம்.சி. சீனியர் செகண்டரி பள்ளியில் விஜயதசமி தினத்தையொட்டி மாணவர் சேர்க்கை நடந்தது. நவராத்திரியையொட்டி கே.எம்.சி., பொதுப் பள்ளி வளாகத்தில் கொலு அமைத்து சிறப்பு வழிபாடு நடைபெற்றது. விஜயதசமி தினத்தையொட்டி பள்ளியில் நடந்த மாணவர் சேர்க்கையில் புதிதாக சேர்ந்த மழலையர் மற்றும் மாணவ மாணவிகளை நவராத்திரி கொலுவுக்கு முன் பெற்றோர்களுடன் அமர வைத்து, தானியத்தில் அ, ஆ உள்ளிட்ட எழுத்துக்களை எழுத பழகும் வித்யாரம்பம் நிகழ்ச்சி நடந்தது. தொடர்ந்து பள்ளியில் உள்ள சிறப்பம்சங்கள் குறித்து விளக்கமாக பள்ளி தாளாளர் மனோகரன் கூறினார். பள்ளித்தலைவர் கே. சி. சண்முகம் மாணவ மாணவிகளுக்கு வாழ்த்துக்களை தெரிவித்தார். மேலும் விழாவில் பள்ளி முதல்வர் சீனிவாசன் கற்றல் இனிது என்பது குறித்து பேசி, மாணவர்களை பாராட்டினார். ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்கள் உடனிருந்தனர்.

திருப்பூர் கூலிப்பாளையம் விகாஸ் வித்யாலயா மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி வளாகத்தில் விஜயதசமி மாணவர் சேர்க்கை நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு பள்ளி தாளாளர் ஆண்டவர் ராமசாமி, பள்ளி பொருளாளர் ராதா ராமசாமி, செயலாளர் ராமசாமி மாதேஸ்வரன், துணை செயலாளர் சிவப்பிரியா மாதேஸ்வரன் மற்றும் பள்ளி முதல்வர் அனிதா மற்றும் ஆசிரியர்கள் முன்னிலை வகித்தனர். அவினாசி குருக்கள் காமாட்சி தாசர் சாமிகளால் வித்யாரம்பம் பூஜைகள் செய்யப்பட்டு குழந்தைகளுக்கு இனிப்புகள் வழங்கப்பட்டது.

# வேளாண் இடுபொருட்களுக்கு மானியம் விவசாயிகளுக்கு வேளாண்மை துறையினர் அழைப்பு

உடுமலை, அக். 26

உடுமலை சுற்றுப்புற பகுதியில் விவசாயம் பிரதான தொழிலாக உள்ளது. நீர் இருப்பு மற்றும் நீர்வரத்துக்கு ஏற்றவாறு விவசாயிகள் காய்கறிகள், பழங்கள், கீரைகளை சாகுபடி செய்து வருகின்றனர். இவர்களுக்கு தேவையான இடுபொருட்கள் உரங்கள் மானிய விலையில் வேளாண்மை துறை சார்பில் வழங்கப்பட்டு வருகிறது.

அந்த வகையில் பயிர் சாகுபடிக்கு தேவையான இடுபொருட்களுக்கு மானியம் வந்துள்ளதாகவும், இடுபொருட்களும் கையிருப்பில் உள்ளதாகவும் வேளாண் துறை சார்பில் தெரிவிக்கப்பட்டு உள்ளது.

இது குறித்து வேளாண்மை உதவி இயக்குனர் தேவி கூறியதாவது:

தேசிய உணவு மற்றும் ஊட்டச்சத்து பாதுகாப்பு திட்டத்தின் கீழ் சான்று பெற்ற உளுந்து, சோளம், நிலக்கடலை விதைகளும், விதை கிராமத் திட்டத்தின் கீழ் நெல் விதை 50 சதவீத மானியத்தில் வினியோகம் செய்யப்பட்டு வருகிறது. 25 சதவீத உரச் செலவை குறைக்கக்கூடிய ரைசோபியம், அசோஸ்பைரில்லம், பாஸ்போ பாக்டீரியா, பொட்டாஷ் பாக்டீரியா, துத்தநாக சத்தை கரைத்துக் கொடுக்கும் உயிர் உரங்கள் 50 சதவீத மானியம் போக ரூ. 225ல் பெற்றுக் கொள்ளலாம். உயிர் பூச்சிக்கொல்லிகள் மெட்டாரைசியம் சூடோமோனஸ், டிவிரிடி ஆகியவை 50 சதவீத மானியத்தில் உள்ளது.

எனவே மானிய விலையில் உள்ள நுண்ணூட்டக் கலவைகள் ஒரு கிலோ வீதம் நெல் நுண்ணூட்டம் ரூ. 57.04, கரும்பு நுண்ணூட்டம் ரூ. 64.94, தென்னை நுண்ணூட்டம் ரூ102.54, பயறு நுண்ணூட்டம் ரூ.132.80, சிறுதானிய நுண்ணூட்டம் ரூ.101.29க்கு விற்பனை செய்யப்படுகிறது.

மேலும் தேக்கு, மகாகனி, சவுக்கு, மலை வேம்பு போன்ற மரக்கன்றுகள் வேளாண் காடுகள் திட்டத்தில் விவசாயிகளுக்கு வழங்கப்படுகிறது. ஒரு எக்டேர் பரப்பளவில் வேம்பு சாகுபடி செய்ய மானியம் ரூ. 21 ஆயிரம் வழங்கப்பட உள்ளது. மேலும் தென்னங்கன்றுகள் நெட்டை குட்டை ரகம் ரூ.125 க்கு விற்பனைக்கு உள்ளது. பேட்டரி தெளிப்பான் மானிய விலையில் வழங்கப்பட உள்ளது.

விவசாயிகள் தங்கள் கைப்பேசியில் உழவன் செயலி மூலம் பதிவு செய்தும் சம்பந்தப்பட்ட பகுதி வேளாண்மை அலுவலரை 9344737991 என்ற எண்ணிலும், துணை வேளாண்மை அலுவலரை 7904087328 என்ற எண்ணிலும் தொடர்பு கொண்டு பயன் அடையலாம். இவ்வாறு அவர் கூறினார்.

# சமையல் தொழிலாளியிடம் கத்தி முனையில் பணம் பறித்த வாலிபர் கைது

திருப்பூர், அக். 26

கோவை மாவட்டம் அன்னூர் சாலையை சேர்ந்தவர் சண்முகசுந்தரம். இவர் பல்லடத்தை அடுத்த அருள்புரம் திருப்பூர் செல்லும் சாலையில் உள்ள தனியாருக்கு சொந்தமான பாரில் சமையல் மாஸ்டராக வேலை பார்க்கிறார். இவர் நேற்று காலை சாலையில் நடந்து சொல்லும்போது அந்த வழியாக வந்த வாலிபர் ஒருவர் சண்முக சுந்தரத்தை கத்தியை காட்டி மிரட்டி ரூ.900ஐ பறித்து சென்றார்.

இது குறித்து பல்லடம் போலீசில் சண்முக சுந்தரம் புகார் செய்தார். புகாரின் பேரில் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரித்தனர். விசாரணையில் கத்தி முனையில் வழிப்பறியில் ஈடுபட்டவர் தேனி மாவட்டம் உத்தமபாளையத்தை சேர்ந்த அபுதாகீர் மகன் முகமது மீரான்(வயது 24) என்பது தெரியவந்தது. இதையடுத்து முகமது மீரானை போலீசார் கைது செய்து, பல்லடம் குற்றவியல் நீதிமன்றத்தில் நீதிபதி முன் ஆஜர்படுத்தி சிறையில் அடைத்தனர்.

# கலைஞர் மகளிர் உரிமை தொகை திட்டத்தால் புதிய குடும்ப அட்டைகள் அச்சிடும் பணி நிறுத்தம்

திருப்பூர், அக். 26

கலைஞர் மகளிர் உரிமைத்தொகை திட்டத்தால் தமிழ்நாடு முழுவதும் புதிய குடும்ப அட்டைகள் அச்சிடும் பணி கடந்த 4 மாதங்களாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. கலைஞர் மகளிர் உரிமைத்தொகை திட்டத்தில் குடும்பத்தலைவிக்கு மாதம் ரூ. 1000ம் வழங்கும் திட்டத்தை கடந்த செப்டம்பர் 15ந் தேதி அண்ணா பிறந்த நாளன்று, தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்தார்.

இதில் தமிழ்நாடு முழுவதும் ஒரு கோடி பெண்களுக்கு மேல் இந்த உதவித்தொகை வழங்கப்பட்டுள்ளது. தற்போது இந்த திட்டத்தில் பலரும் பயன்பெறவே புதியதாக குடும்ப அட்டைகளை பலரும் விண்ணப்பிக்க தொடங்கி உள்ளதாகவும், அதேசமயம் உரிய தகுதி வாய்ந்த விண்ணபதாரர்களுக்கும், குடும்ப அட்டை விண்ணப்பித்து 4 மாதங்களாகியும் கிடைக்காமல் இருப்பதாக புகார்கள் எழுந்துள்ளன.

இதுகுறித்து வட்ட வழங்கல்துறை அலுவலர்களிடம் கேட்டபோது அவர்கள் கூறியதாவது:

கலைஞர் மகளிர் உரிமைத்தொகை திட்டப்பணிகள் கடந்த ஜூலை மாதம் தொடங்கப்பட்டன. அப்போது தொடங்கி தற்போது அக்டோபர் மாதம் வரை புதிய குடும்ப அட்டைகள் யாருக்கும் வழங்கப்படவில்லை. ஒவ்வொரு மாவட்டத்திலும் புதிய குடும்ப அட்டைக்கு பல ஆயிரம் பேர் விண்ணப்பித்துள்ளனர். கடந்த 4 மாதங்களாக குடும்ப அட்டை அச்சிடப்படவில்லை.

கலைஞர் மகளிர் உரிமைத்தொகை திட்டத்துக்கு பலர் இனி வரும் நாட்களில் விண்ணப்பிக்க இருப்பதால், ஒரே கதவு எண்ணில் பலர் புதியதாக விண்ணப்பிப்பதையும் பார்க்க முடிகிறது. ஆனாலும் உரிய விசாரணைகள் முடிந்த பின்னர்தான், உரியவர்களுக்கு குடும்ப அட்டைகள் வழங்க இயலும். ஒவ்வொரு மாவட்டத்திலும் சுமார் 1500 முதல் 2000 குடும்ப அட்டைகள் புதியதாக விண்ணப்பித்து காத்துக்கொண்டிருக்கின்றனர்.

சென்னையில் இது பல மடங்கு அதிகமாக இருக்கும். கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டம் தொடங்கப்பட்ட நிலையில், தற்போது கடந்த ஒரு வார காலமாக தான் பெயர் மாற்றம், முகவரி மாற்றம் ஆகிய பணிகளை தொடங்கி வழங்கி வருகிறோம். இன்னும் புதிய குடும்ப அட்டை அச்சிட்டு வழங்கும் பணி தொடங்கவில்லை. தமிழ்நாடு முழுவதும் இது நிலுவையில் இருப்பதால், விரைவில் அரசு இது தொடர்பாக தெளிவான முடிவை அறிவிக்கும் என எதிர்பார்க்கிறோம்". இவ்வாறு அவர்கள் தெரிவித்தனர்.

# இஸ்ரேல்ஹமாஸ் போரால் திருப்பூர் ஆடை வர்த்தகத்திற்கு பாதிப்பு இல்லை: ஏற்றுமதியாளர்கள் தகவல்

திருப்பூர், அக். 26

இந்திய பின்னலாடை ஏற்றுமதி வர்த்தகம் பல்வேறு நாடுகளுடன் தொடர்பை ஏற்படுத்தியுள்ளது. திருப்பூரில் உற்பத்தியாகும் பின்னலாடை, அமெரிக்கா, ஐரோப்பா, பிரிட்டன் உள்ளிட்ட நாடுகளுக்கு ஏற்றுமதியாகிறது. அங்குள்ள பெரிய வர்த்தகர்கள், உலக நாடுகளில் உள்ள சில்லரை வர்த்தகர்களுக்கு, ஆடைகளை விற்கின்றனர்.

பின்னலாடை ஏற்றுமதி வர்த்தகம், சங்கிலி தொடர் போல பல்வேறு நாடுகளையும் ஒருங்கிணைக்கிறது.

இதன்காரணமாக, சங்கிலி தொடரில் ஏதாவது ஒரு இடத்தில் பாதிப்பு ஏற்பட்டாலும், அதன் தாக்கம், தொடர்புள்ள நாடுகள் அனைத்திலும் எதிரொலிக்கிறது.




கொரோனா தொற்று பரவலால் பாதிக்கப்பட்ட பின்னலாடை ஏற்றுமதி வர்த்தகம், அடுத்துவந்த ஆண்டில் மீண்டும் சூடுபிடித்தது.

இருப்பினும், ரஷ்யா உக்ரைன் நாடுகளிடையே துவங்கிய போரால், திருப்பூருக்கு புதிய ஏற்றுமதி ஆர்டர் கிடைப்பது அரிதாக மாறியுள்ளது.

புதிய வளர்ச்சி இல்லாவிட்டாலும், வழக்கமான ஆர்டர்களை பெற முடியாமல், ஏற்றுமதியாளர்கள் முயற்சித்து வருகின்றனர்.

கடந்த ஒன்றரை ஆண்டுகளாக தொடரும் போராட்டத்தால், திருப்பூர் பின்னலாடை ஏற்றுமதி வர்த்தகமும், நூற்பாலைகள் மற்றும் தொடர்புடைய ஜாப் ஒர்க் நிறுவனங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

எப்படியும் போர் முடிவுக்கு வரும் என்ற நம்பிக்கையுடன் நாட்களை கடத்திக்கொண்டு இருக்கின்றனர்.

இந்நிலையில் இஸ்ரேல் ஹமாஸ் இடையே தொடங்கிய போர் திருப்பூர் ஏற்றுமதியாளர்களை கவலையில் ஆழ்த்தியுள்ளது.


இஸ்ரேல் போர் சூழல் காரணமாக நேரடி பாதிப்பு திருப்பூருக்கு இருக்காது. இருப்பினும் சங்கிலி தொடராக உள்ள வர்த்தக தொடர்புகள் பாதிக்கும். இதன்காரணமாக, மீண்டும் ஏற்றுமதி ஆர்டர் பெறுவதில் இழுபறி ஏற்படும் என திருப்பூர் ஏற்றுமதியாளர்கள் தெரிவித்தனர்.

# உடுமலை சட்டமன்ற அலுவலகத்தில் ஆயுத பூஜை விழா

உடுமலை: அக். 26

அ.தி.மு.க. திருப்பூர் புறநகர் மேற்கு மாவட்டம் உடுமலைப்பேட்டை சட்டமன்ற உறுப்பினர் அலுவலகத்தில் ஆயுதபூஜை விழா முன்னாள் அமைச்சரும் திருப்பூர் புறநகர் மாவட்ட செயலாளருமான உடுமலை கே. ராதாகிருஷ்ணன் எம்.எல்.ஏ., தலைமையில் கொண்டாடப்பட்டது.

நிகழ்ச்சியில் உடுமலை நகர செயலாளர் ஹக்கீம்,



கட்சியின் மாவட்ட இணை செயலாளர் சாஸ்திரி சீனிவாசன், அனைத்துலக எம்ஜிஆர்., மற்றும் துணை செயலாளர் வக்கீல் மனோகரன், மாவட்ட சார்புஅணி துபாய் ஆறுமுகம், குடிமங்கலம் ஒன்றிய செயலாளர் அன்பர்ராஜன், முருகேசன், குடிமங்கலம் மேற்கு ஒன்றிய தகவல் தொழில்நுட்ப பிரிவு செயலாளர் பூபதி , பெரிய கோட்டை ஊராட்சி மன்ற துணைத்தலைவர் விஸ்வநாதன், சரண்யா தேவி, வனிதாமணி , யூசி செல்வராஜ், சின்ன வீரம்பட்டி காளிமுத்து, வக்கீல் கண்ணன் , கர்ணசேகரன் ,கவுன்சிலர் சௌந்தர்ராஜன் , சந்தை வேலாயுதம், சரவணன் மற்றும் நிர்வாகிகள் உட்பட சார்பு அணி நிர்வாகிகள் ஆயுத பூஜை நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

# மீண்டும் சூடுபிடிக்கும் கொப்பரை வர்த்தகம்: உடுமலை விவசாயிகள் மகிழ்ச்சி

உடுமலை, அக். 26

திருப்பூர், கோவை மாவட்டங்களில் தென்னை சாகுபடி பிரதானமாக உள்ளது. இங்கு உற்பத்தியாகும் தேங்காய் கொப்பரை விலையை ஆதாரமாக கொண்டு விலை நிர்ணயம் செய்யப்படுகிறது. கடந்த 2 ஆண்டுகளாக தேங்காய் மற்றும் கொப்பரை விலையில் மந்தநிலை நிலவுகிறது. தென்னை சாகுபடியில் வெள்ளை ஈ தாக்குதல், வாடல் நோய் போன்ற காரணங்களால் உற்பத்தி செலவு பல மடங்கு அதிகரித்த நிலையில் தேங்காய் விலை சரிவால் விவசாயிகள் கவலை அடைந்தனர்.

கடந்த சில மாதங்களாக ஒரு தேங்காய் விலை ரூ.10 க்கும் குறைவாக இருந்தது. இதனால் பெரும்பாலான விவசாயிகள் அதிக உற்பத்தி இருக்கும் சீசனில் தேங்காய் விற்பனை செய்யாமல் தோட்டங்களிலேயே இருப்பு வைத்தனர். இவ்வாறு பல லட்சம் தேங்காய்கள் உடுமலைப் பகுதியில்



விற்பனையாகாமல் இருப்பு செய்யப்பட்டது. கொப்பரை உற்பத்திக்கான உலர் கலங்களிலும் உற்பத்தி குறைக்கப்பட்டு வர்த்தகம் பாதித்தது.

நீண்ட இடைவெளிக்கு பிறகு தற்போது கொப்பரை வர்த்தகம் மீண்டும் சூடு பிடித்ததுடன் உற்பத்தியும் அதிகரித்துள்ளது. கடந்த சில நாட்களாக காங்கேயம் சந்தை அடிப்படையில் கொப்பரை விலையும் ஏறுமுகத்தில் உள்ளது. இதனால் இருப்பு வைத்த தேங்காய்களை விற்பனை செய்ய விவசாயிகள் திட்டமிட்டுள்ளனர்.

கடந்த சில மாதங்களாக வர்த்தகத்தில் நிலவிய தொய்வு காரணமாக தேங்காய் விற்பனை செய்யவில்லை. வழக்கமாக அக்டோபர் மாதத்தில் தென்னை மரங்களில் தேங்காய் உற்பத்தி குறைவாகவே இருக்கும். இதனால் உலர் களங்களுக்கு தேவை அதிகரித்து தேங்காய் விலை பல மடங்கு ஏறும். ஆனால் நடப்பாண்டு அதிக காய்கள் இருப்பு வைக்கப்பட்டதால் கொப்பரை தேங்காய் விலையில் உடனடியாக மாற்றம் ஏற்படாமல் படிப்படியாக விலை உயர்ந்து வருகிறது.

தற்போது பரவலாக துவங்கி உள்ள பருவமழையால் தேங்காய் பாதிப்பதை தவிர்க்கவும் விற்பனைக்கு ஆர்வம் காட்ட துவங்கியுள்ளோம். இந்த ஆண்டு வறட்சியால் ஆயிரக்கணக்கான தென்னை மரங்கள் கருகி தேங்காய் உற்பத்தி குறைந்துள்ளதும் சந்தையில் தாக்கத்தை ஏற்படுத்தும் என விவசாயிகள் தெரிவித்தனர்.

அரசு கொள்முதல் மையங்களில் மீண்டும் கொப்பரை கொள்முதல் அறிவிப்பு வெளியாகி உள்ளது. அதேபோல் தென்னை நார் உற்பத்தி தொழிலை "ஆரஞ்சு" வகைப்படுத்திய உத்தரவை மாசுக்கட்டுப்பாட்டு வாரியம் திரும்ப பெற்றுள்ளது. இதனால் நார் உற்பத்தி அதிகரிக்கும். உற்பத்திக்கு மூலப்பொருளான தேங்காய் மட்டைக்கும் விலை கிடைக்கும் என்று எதிர்பார்ப்பு நிலவுகிறது. இவ்வாறு தேங்காய் மற்றும் கொப்பரை விலை உயர்வுக்கு சாதகமான சூழல் ஏற்பட்டுள்ளது விவசாயிகள் மத்தியில் மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

# ஊத்துக்குளி பகுதியில் மின்தடை ஏற்படும் பகுதிகள்

ஊத்துக்குளி, அக். 26

ஊத்துக்குளி அருகே உள்ள பல்லகவுண்டன் பாளையம் துணைமின்நிலையத்தில் நாளை (வியாழக்கிழமை) மாதாந்திர பராமரிப்பு பணி நடைபெறுகிறது. எனவே நாளை காலை 9 மணி முதல் மாலை 5 மணிவரை விஜயமங்கலம், பகளாயூர், புலவர்பாளையம், கல்லியம்புதூர், வீரசங்கிலி, பல்லகவுண்டன்பாளையம், கூனம்பட்டி, மாச்சாபாளையம், ஆலம்பாளையம், வேப்பம்பாளையம், கந்தப்பகவுண்டன்புதூர், சாமியார் பாளையம், சாம்ராஜ்பாளையம், மு.தொட்டிபாளையம், புத்தூர்பள்ளபாளையம், கஸ்தூரிபாளையம், நடுப்பட்டி, காங்கேயம்பாளையம் மற்றும் பழனிகவுண்டம்பாளையம் ஆகிய பகுதிகளில் மின் வினியோகம் இருக்காது என உதவி மின் பொறியாளர் தெரிவித்துள்ளார்.

நமது தினகனி
செய்திகள் மற்றும் விளம்பரங்கள்
தொடர்புக்கு:
94436 99066

# மாவட்ட அ.தி.மு.க. பூத்கமிட்டி நிர்வாகிகள் கூட்டம்



திருச்சி, அக். 26

திருச்சி மாநகர் மாவட்ட அ.தி.மு.க. சார்பில் பூத்கமிட்டி நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம் காந்திமார்கெட் பகுதியில் நடைபெற்றது.

திருச்சி,மாநகர்மாவட்ட செயலாளர் ஜெ. சீனிவாசன் தலைமை வகித்தார். கழக அமைப்பு செயலாளர் டி. ரத்தினவேல் முன்னிலை வகித்தார். சிறப்பு விருந்தினராக முன்னாள் அமைச்சரும், அமைப்பு செயலாளருமான கோகுல இந்திரா கலந்து கொண்டு பேசியதாவது:

தி.மு.க. ஆட்சியில் மக்கள் கடும் அதிருப்தியில் உள்ளனர். பொது செயலாளர் எடப்பாடி பழனிச்சாமி மாவட்டம் வாரியாக பூத் கமிட்டி உறுப்பினர்களை விரைவில் சந்திக்கவுள்ளார்.

வருகிற பாராளுமன்ற தேர்தலையொட்டி அமைக்கப்படும் பூத் கமிட்டி மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது. இந்த பூத் கமிட்டி ஆலோசனை கூட்டம் அனைத்து கிராமங்களிலும் நடத்த முக்கிய காரணம் உறுப்பினர்கள் சேர்க்கையை அதிகப்படுத்தவே.

எனவே நிர்வாகிகள் தொடர்ந்து அ.தி.மு.க.வுக்கு லட்சக்கணக்கில் உறுப்பினர்களை சேர்க்க வேண்டும்.

இவ்வாறு அவர் பேசினார்.

கூட்டத்தில் அரங்கம் நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் நிரம்பி வழிந்தது. இதனால் கட்சியினர் உற்சாகம் அடைந்தனர்.

இதில்நிர்வாகிகள் அய்யப்பன், கேசி. பரமசிவம், ஜாக்குலின், வனிதா, பத்மநாதன், வெல்லமண்டி பெருமாள், பகுதி செயலாளர்கள் வெல்லமண்டி சண்முகம், அன்பழகன், என்.எஸ்.பூபதி, எம்.ஆர். ஆர்.முஸ்தபா, நாகநாதர் பாண்டி, ஏர்போர்ட் விஜி, கலை வாணன், என்ஜினியர்இப்ராம்ஷா, முன்னாள் துணை மேயர் மரியம் ஆசிக், கவுன்சிலர் கோ.கு. அம்பிகாபதி,

நிர்வாகிகள் கலிலுல் ரகுமான், தொழிற்சங்கம் ராஜேந்திரன், இலியாஸ், தென்னூர் அப்பாஸ் மற்றும் முன்னாள் கோட்டத் தலை வர் ஞானசேகர், என்ஜினியர் ரமேஷ், பாலாஜி, நாட்ஸ் சொக்கலிங்கம், ஜோதிவாணன், ஆடிட்டர்ரவி, குரு, என்ஜினியர் கிருஷாந்த், ரோஜர், சுரேந்தர், தென்னூர் ஷாஜஹான், பாலக்கரை ரவீந்திரன், வசந்தம் செல்வமணி, குருமூர்த்தி, ஒத்தக்கடை மகேந்திரன், மணிகண்டன், அப்பாக்குட்டி, கன்னியப்பன், வக்கீல்கள் கங்கைச்செல்வன், சுரேஷ்,

முல்லை சுரேஷ் ஜெயராமன், சசிகுமார், நிர்வாகிகள் கே.டி. அன்புரோஸ், ரஜினிகாந்த், டிபன் கடை கார்த்திகேயன், வரகனேரி சரவணன், எடத்தெரு பாபு, காசிபாளையம் சுரேஷ்குமார், பொன். அகிலாண்டம், உடையான் பட்டி செல்வம், வாழைக்காய் மண்டி சுரேஷ், கே.டி.ஏ. ஆனந்தராஜ்,

என்ஜினியர் ராஜா என்கிற சிவசங்கர ராஜவேலு, தர்கா காஜா, கேபிள் முஸ்தபா, கயிலை கோபி, வட்டச்செயலாளர் வினோத்குமார், பாலக்கரை சக்திவேல், வணக்கம் சோமு, டைமன் தாமோதரன், நத்தர்ஷா, கட்பீஸ் ரமேஷ் அரப்ஷா, கே.பி.ராமநாதன், ஆரி, ஸ்பிடு வேலு, தென்னூர் ராஜா, கல்லுக்குழி முருகன், எம்.ஜே.பி.வெஸ்லி, புத்தூர் சதீஷ்குமார்,

கே.சி.பி. ஆனந்த், ரமணிலால், சந்தோஷ்ராஜ், வக்கீல் புவனேஸ்வரி, ஜெயஸ்ரீ, மகாலட்சுமி, என்ஜினியர் சிராஜுதீன், பாபு உள்பட பலர் கலந்து கொண்டனர்.

# தசரா திருவிழாவில் சூரசம்ஹாரம்: பாளையங்கோட்டையில் அணிவகுத்த 11 அம்மன் சப்பரங்கள்



நெல்லை, அக். 26

நெல்லையில் தசரா விழாவுக்கு பிரசித்தி பெற்ற பாளையங்கோட்டை ஆயிரத்தம்மன் கோவிலில்தசராதிருவிழா கடந்த 14ந்தேதி கொடியேற்றத்துடன் தொடங்கியது.

இதேபோல் பாளையங்கோட்டையில் உள்ள பேராச்சி அம்மன், தூத்துவாரி அம்மன், தெற்கு முத்தாரம்மன், வடக்கு முத்தாரம்மன், யாதவ உச்சிமாகாளி, விசுவகர்ம உச்சிமாகாளி, வடக்கு உச்சிமாகாளி, முப்பிடாதி அம்மன், புதுப்பேட்டை தெருஉலகம்மன்கோவில், புது உலகம்மன் கோவில் ஆகிய அம்மன் கோவில்களிலும் தசரா விழா துர்கா பூஜையுடன் தொடங்கியது. பின்னர் விழா நாட்களில் தினமும் அம்மனுக்கு சிறப்பு அபிஷேக அலங்கார தீபாராதனையும், சிறப்பு பூஜையும் நடந்தது.

நேற்று தசரா திருவிழா நடந்தது. இதையொட்டி 11 அம்மன் கோவில்களிலும் அம்மன்களுக்கு துர்கா ஹோமமும், யாக சாலை பூஜையும் நடந்தது. தொடர்ந்து சிறப்பு அபிஷேகம், அலங்கார தீபாராதனை நடந்தது. இரவில் தாமிரபரணி ஆற்றில் இருந்து கிரகம் எடுத்து வரப்பட்டது. தொடர்ந்து அம்மன்களுக்கு சிறப்பு அபிஷேக அலங்கார தீபாராதனையும், சிறப்பு பூஜையும் நடைபெற்றது. 11 அம்மன் கோவில் சப்பரங்களும் பாளையங்கோட்டையில் உள்ள தெருக்களில் பவனி வந்தன.

இன்று இரவு 8மணிக்கு 11 சப்பரங்களும் பாளையங்கோட்டை ராமசாமி கோவில் திடலில் அணிவகுத்து நின்றன. அப்போது ஏராளமான பக்தர்கள் தேங்காய் உடைத்து சுவாமி தரிசனம் செய்தனர். மதியம் 1 மணிக்கு ராஜகோபாலசாமி கோவில் முன்பு அணிவகுத்தன. இரவு 7 மணிக்கு மார்க்கெட் பகுதியில் நிற்கின்றன. இரவு 12மணிக்கு போலீஸ் கட்டுப்பாட்டு அறை அருகே உள்ள மாரியம்மன் கோவில் முன்பு 11 அம்மன்களும் அணிவகுத்து நிற்க சூரசம்ஹாரம் நடக்கிறது.

இதேபோல் நெல்லை டவுனில் புட்டாபுரத்தி அம்மன், முத்தாரம்மன், உச்சிமாகாளியம்மன், முப்பிடாதி அம்மன், வாகையடி அம்மன், திரிபுரசுந்தரி அம்மன், துர்க்கை அம்மன், தங்கம்மன், மாரியம்மன், சாலியர் தெரு மாரியம்மன் உள்ளிட்ட 36 அம்மன் கோவில்களில் நேற்று தசரா திருவிழா நடந்தது.

இதையொட்டி காலையில் அம்மனுக்கு சிறப்பு அபிஷேக அலங்கார தீபாராதனையும், இரவில் சப்ரத்தில் அம்மன் வீதி உலாவும் நடந்தது.

இதேபோல் தச்சநல்லூரில் இன்று இரவு சந்திமறித்தம்மன், தேனீர்குளம் எக்காளதேவி அம்மன், வாலாஜபேட்டை முத்துமாரியம்மன், தளவாய்புரம் துர்க்கை அம்மன், உச்சினிமகாளியம்மன், உலகம்மன் கோவில் உள்ளிட்ட கோவில்களில் இருந்து சப்பரங்கள் அணிவகுத்துநாளைமதியம்சூரசம்ஹாரம் நிகழ்ச்சி நடைபெறும்.

# மேட்டுப்பாளையம் – ஊட்டி இடையிலான மலைப்பாதையில் தொடரும் விபத்துகளை கட்டுப்படுத்துவது எப்படி?




அருவங்காடு, அக். 26

மேட்டுப்பாளையம் ஊட்டி இடையிலான மலைப்பாதையில் விபத்துகள் தொடர்ந்த வண்ணம் உள்ளது. குன்னூர் மலைப்பாதையில் கடந்த 54 நாட்களில் நடந்த சாலை விபத்துக்களில் 9 பேர் பலியாகினர். 40க்கும் மேற்பட்டோர் காயம் அடைந்தனர்.

கடந்த மாதம் 30ந்தேதி மரப்பாலம் அருகே தென்காசி மாவட்டம் கடையம் பகுதியைச் சேர்ந்த சுற்றுலா பேருந்து கவிழ்ந்தது. இதில் 9 பேர் பலியாயினர். 30 பேர் காயம் அடைந்தனர். இந்த மாதம்8ந்தேதிமலைப்பாதையில் சென்ற ஒரு சுற்றுலா பஸ் திடீரென தீ பிடித்து எரிந்தது. இதில் அந்த பஸ்சில் பயணித்த மாணவ மாணவிகள் அதிர்ஷ்ட வசமாக உயிர் தப்பினர்.

மேலும் கடந்த 10ந் தேதி நடந்த கார் விபத்தில் கூடலூரை சேர்ந்த சிறுமி உட்பட 2 பேர் காயம் அடைந்தனர். பர்லியாறு பகுதியில் ஒருசுற்றுலா பஸ் விபத்துக்கு உள்ளாகியதில் 5 பேர் படுகாயம் அடைந்தனர்.

மாவட்டத்துக்கு வரும் ஒருசில சுற்றுலா பஸ்கள் மலைப்பாதையில் செல்லும்போது விபத்துக்கு உள்ளாகும் சம்பவம் தொடர்ச்சியாக நடந்து வருகிறது.

இது அந்த வழியாக செல்லும் வாகன ஓட்டிகளிடம் மிகுந்த சோகத்தை ஏற்படுத்தி உள்ளது. இது குறித்து வாகன ஓட்டிகள் கூறியதாவது:

நீலகிரி மாவட்டத்துக்கு சமவெளி பகுதியில் இருந்து எண்ணற்ற சுற்றுலா பஸ்கள் வந்து செல்கின்றன. மேலும் வெளிமாநிலம், வெளிநாடுகளைச் சேர்ந்த சுற்றுலா பயணிகளும் அதிகளவில் கார்கள் மூலம் வந்து செல்கின்றனர்.

நீலகிரிக்கு சுற்றுலா வரும் டிரைவர்கள் பெரும்பாலும் போக்குவரத்து விதிகளைபின்பற்றுவது இல்லை.

அவர்கள் சம வெளி பகுதியில் செல்வது போல வாகனங்களை வேகமாகவும், கவன குறைவாகவும் இயக்குகின்றனர். இதனால் மலைப்பாதையின் பல்வேறு பகுதிகளில் விபத்துக்கள் அதிகரித்து வருகின்றன.

குறிப்பாக ஊட்டியில் இருந்து மேட்டுப்பாளையம் நோக்கி புறப்படும் வாகனங்கள் மலைப்பாதையில் கீழ்நோக்கி செல்லும்போது அதிவேகமாக செல்வதுடன் பிரேக் மற்றும் கிளட்ச் ஆகியவற்றை தொடர்ந்து பயன்படுத்துகின்றனர். இதனால் டயர்களில் உள்ள டிரம் சூடாகி பிரேக் பிடிப்பதில்லை. இதனால் வாகனங்கள் கட்டுப்பாட்டை இழந்து விபத்து ஏற்படும் சூழல் தொடர்கதையாக உள்ளது.

குறிப்பாக மலைப்பாதையில் செல்லும் வாகனங்கள் அதிவேகத்தை தவிர்த்து மிகுந்த கவனத்துடன் 20 முதல் 30 கி.மீ வேகத்தில் சென்றால் பாதிப்புகள் நிகழாது. இதற்காக அங்கு பிரத்யேக சாலை விதிகள் உள்ளன.

இருந்தபோதிலும் பெரும்பாலான வாகன ஓட்டிகள் பின்பற்றுவது இல்லை. பருவ மழை தொடங்கி உள்ள நிலையில் விபத்துகள் மேலும் அதிகரிக்க வாய்ப்பு உள்ளது.

எனவே சுற்றுலா பஸ் டிரைவர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் போக்குவரத்து போலீசார் ஊட்டி, குன்னூர், பர்லியாறு, கல்லாறு மற்றும் மேட்டுப்பாளையம் உள்ளிட்ட பகுதிகளில் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

இதன் ஒரு பகுதியாக மலைப்பாதையில் உள்ள சாலை விதிகள் மற்றும் வாகனங்களை எவ்வாறு பாதுகாப்பாக இயக்க வேண்டும் என்பது குறித்து விழிப்புணர்வு பதாகைகளை வைக்க வேண்டும் என கோரிக்கை விடுத்து உள்ளனர்.

# சாலையில் செல்வோரை கண்காணிக்கும் வகையில் கேமராக்கள் அமைக்க கோரிக்கை

வேலாயுதம்பாளையம், அக். 26

கரூர் மாவட்டம் வேலாயுதம்பாளையம் போலீஸ் நிலைய இன்ஸ்பெக்டர் ராஜேஷ் திருட்டு குற்றங்களை கண்டுபிடிக்கும் வகையில் தரமான கேமரா அமைப்பது குறித்து ஒரு செய்தி குறிப்பில் கூறியிருப்பதாவது:

வேலாயுதம்பாளையம் சுற்றுவட்டார பகுதிகளில் உள்ள வியாபாரகடைகள், நிதி நிறுவனங்கள் அதே போல் அனைத்து வீடுகளிலும் திருட்டை தடுக்கும் வகையில் தரமான கேமரா வைக்க வேண்டும். பல்வேறு வியாபார கடைகளில் வைத்திருக்கும் கேமராக்கள் சாலையில் வருவோர், போவோர் அடையாளம் தெரியும்படி கேமராவை வைக்கவேண்டும். பெரும்பாலான கடைகளில் கல்லாப்பெட்டியை குறிவைத்தே கேமராக்கள் பொருத்தப்பட்டுள்ளது. அதேபோல் பெரும்பாலான கடைகளில் வைக்கப்பட்டுள்ள கேமராக்கள் செயல்பட்டும் பதிவு ஆகாத நிலையில் உள்ளது. சாலையில் செல்வோரை கண்காணிக்கும் வகையில் கேமராக்கள் அமைக்கப்பட வேண்டும் குற்ற சம்பவங்களை தடுக்கும் வகையில் சந்தேகப்படும் வகையில் எவரேனும் நின்று கொண்டிருந்தாலோ, தெருக்களில் சுற்றித் கொண்டிருந்தாலோ, எவரேனும் நின்று கொண்டு நோட்டமிட்டாலோ உடனடியாக 100 என்ற தொலைபேசி எண்ணுக்கு போன் செய்து தகவல் தெரிவித்தால் உடனடியாக போலீசார் சம்பவ இடத்திற்கு விரைந்து வந்து நடவடிக்கை எடுக்கப்படும். மேலும் பொது மக்கள் குற்றம் சார்ந்த நிகழ்வுகளுக்கு 100 என்ற போன் நம்பரை பயன்படுத்தவும். மேலும் சட்டவிரோதமாக செயல்படும் சூதாட்டம், சேவல் சண்டை, லாட்டரி சீட்டு, கஞ்சா, பான் மசாலா, குட்கா போன்ற தமிழக அரசால் தடை செய்யப்பட்டுள்ள பொருட்களை விற்பனையை தடுக்கும் வகையில் விற்பனை செய்பவர்கள் குறித்து தகவல் கொடுத்தால் உடனடி நடவடிக்கை எடுக்கப்படும் தகவல் தெரிவித்தவர்களின் பெயர்கள் ரகசியம் காக்கப்படும் என அந்த செய்தி குறிப்பில் தெரிவித்துள்ளார்.

# சேலத்தில் மீண்டும் பூக்கள் விலை உயர்வு



சேலம், அக். 26

சேலம் பூ மார்க்கெட்டுக்கு சேலம், நாமக்கல், தர்மபுரி, கிருஷ்ணகிரி உள்பட பல்வேறு பகுதிகளில் இருந்து பூக்கள் விற்பனைக்கு கொண்டு வரப்படுகின்றன. இந்த பூக்களை சேலம் மற்றும் அண்டை மாவட்டங்களை சேர்ந்த வியாபாரிகள் மற்றும் பொதுமக்கள் வாங்கி செல்கிறார்கள்.

ஆயுத பூஜை மற்றும் விஜய தசமியையொட்டி கடந்த 22ந் தேதி சேலம் மார்க்கெட்டில் ஒரு கிலோ மல்லிகைபூ 700ரூபாய்க்கு விற்பனையானது. பின்னர் 23ந் தேதி விலை குறைந்த நிலையில் நேற்று ஒரு கிலோ மல்லிகை பூ 500 ரூபாய்க்கு விற்கப்பட்டது.

விலை மீண்டும் அதிகரித்து 600 ரூபாயாக உயர்ந்தது. இதேபோல நேற்று 280 ரூபாய்க்கு விற்கப்பட்ட முல்லைப்பூ இன்று 400 ரூபாய்க்கும், ஜாதி மல்லிகை பூ நேற்று 260 விற்கப்பட்ட நிலையில் இன்று 280 ஆகவும் உயர்ந்தது.

இதே போல காக்கட்டான் 60 ரூபாயிலிருந்து 100 ரூபாயாகவும், அரளிப்பூ 120 ரூபாயிலிருந்து 160 ஆகவும் உயர்ந்தது. ஆனாலும் பொதுமக்கள் மற்றும் வியாபாரிகள் அதிக அளவில் பூக்களை வாங்கிச் சென்றனர்.

வருகிற நாட்களில் முகூர்த்த நாள் மற்றும் கோவில் திருவிழாக்கள் இருப்பதாலும் இந்த பூக்கள் விலை உயர்வு ஏற்பட்டுள்ளதாக வியா பாரிகள் தெரிவித்தனர்.

# கிரிக்கெட் போட்டியில் வெற்றி பெற்ற அணிகளுக்கு பரிசுகள்



தொட்டியம், அக். 26

திருச்சி மாவட்டம் காட்டுப்புத்தூர் எஸ்.பி.சி.சி நண்பர்கள் நடத்திய 10ம் ஆண்டு தொடர்கிரிக்கெட் போட்டி காட்டுப்புத்தூர் ஜமீன்தார் மேல்நிலைப் பள்ளி வளாகத்தில் நடைபெற்றது.

4 நாட்கள் நடைபெற்ற இந்த போட்டியில் பல்வேறு மாவட்டங்களில் இருந்து கிரிக்கெட் அணியினர் கலந்து கொண்டனர்.

முடிவில் வெற்றி பெற்ற அணியினருக்கு காட்டுப்புத்தூர் பங்காரு மருத்துவமனை மருத்துவர் பி. ரமேஷ், மற்றும் காட்டுப்புத்தூர் காவல் நிலைய சிறப்பு உதவி ஆய்வாளர் முருகேசன் ஆகியோர் பரிசுகளை வழங்கினர்.

அதில் முதல் பரிசைப் பெற்ற காட்டுப்புத்தூர் சரவணன் பிரதாஸ் அணியினருக்கு ரூ.25 ஆயிரம் ரொக்கப்பரிசும்மற்றும்பதக்கம், 5அடி உயரம் உள்ள சுழற் கோப்பையையும். இரண்டாம் பரிசைப் பெற்ற காட்டுப்புத்தூர் எஸ்.எம். பிரதாஸ் அணியினருக்கு ரூ. 20 ஆயிரம் ரொக்க பரிசும் 4 அடி உயரமுள்ள சுழற் கோப்பையும், மூன்றாம் பரிசைப்பெற்ற குளித்தலை சங்கர் பாய்ஸ் அணியினருக்கு ரூ. 15 ஆயிரம் ரொக்க பரிசும் 3 அடி உயரம் உள்ள சுழற் கோப்பையும் வழங்கினர். நான்காம் பரிசைப் பெற்ற தோப்புத்தோட்டம் அணியினருக்கு ரூபாய் 10 ஆயிரம் ரூபாய் ரொக்கப் பரிசும் 2அடி உயரம் உள்ள சுழற் கோப்பையும் வழங்கி பாராட்டினர்.

இந்த கிரிக்கெட் போட்டிக்கான அனைத்து ஏற்பாடுகளையும் சிறப்பாக எஸ்.பி.சி.சி. நண்பர்கள் குழுவைச் சேர்ந்த எஸ்.சங்கர் எஸ்.தினேஷ் கே.சண்முகவேல் மற்றும் எஸ்.பி.சி.சி. நண்பர்கள் குழுவினர் சிறப்பாக செய்திருந்தனர்.

# ஓமலூர் டி.எஸ்.பி. அலுவலகத்தில் காதல் ஜோடி பாதுகாப்பு கேட்டு தஞ்சம்




ஓமலூர், அக். 26

சேலம் மாவட்டம் ஓமலூர் அருகே உள்ள மாட்டுக் காரனூர் மோலாண்டிப்பட்டி பகுதியை சேர்ந்தவர் ராபின்(23), நாமக்கல் மாவட்டம் பள்ளி பாளையம் பகுதியில் உள்ள தனியார் நூல் மில்லில் வேலை செய்து வருகிறார்.

நாமக்கல் மாவட்டம் திருச்செங்கோடு காடச்சநல்லூர் பகுதியை சேர்ந்தவர் பிரமிளா(19), இவரும் அதே மில்லில் வேலை செய்து வருகிறார். இதையடுத்து இருவருக்கும் இடையே பழக்கம் ஏற்பட்டு கடந்த ஒரு ஆண்டாக காதலித்து வந்துள்ளனர்.

இவர்களது காதல் விவகாரம் பிரமிளாவின் பெற்றோருக்கு தெரியவர இருவரும் வெவ்வேறு சமூகம் என்பதால் கடுமையாக எதிர்ப்பு தெரிவித்து உள்ளனர். மேலும் வேறு ஒரு நபருடன் திருமணம் செய்ய ஏற்பாடு செய்து உள்ளனர்.

இதைத் தொடர்ந்து வீட்டை விட்டு வெளியேறிய பிரமிளா சேலம் வந்து காதலன் ராபினை ஓமலூர் அருகே பொட்டியபுரம் பெருமாள் கோவிலில் திருமணம் செய்து கொண்டார். தொடர்ந்து இருவரும் உயிருக்கு பாதுகாப்பு கேட்டு ஓமலூர் டி.எஸ்.பி. அலுவலகத்தில் தஞ்சம் அடைந்தனர். இது குறித்து ஓமலூர் டி.எஸ்.பி. மற்றும் போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

# பொதுத்துறை ஊழியர்களுக்கு 25 சதவீதம் போனஸ் வழங்க வேண்டும்: ராமதாஸ் கோரிக்கை



சென்னை, அக். 26

பா.ம.க. நிறுவனர் டாக்டர் ராமதாஸ் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

தமிழ்நாட்டில் தீபஒளி திருநாளையொட்டி தமிழக அரசுக்கு சொந்தமான அரசு போக்குவரத்து கழகங்கள், மின்சார வாரியம், ஆவின், டாஸ்மாக், கூட்டுறவு சர்க்கரை ஆலைகள், கூட்டுறவு பஞ்சாலைகள் போன்ற பொதுத்துறை நிறுவன தொழிலாளர்களுக்கு மிகை ஊதியம் வழங்கப்படுவது வழக்கம். ஆனால், நவம்பர் 12 ந்தேதி கொண்டாடப்படும் தீப ஒளிக்கு இன்னும் இரு வாரங்கள் மட்டுமே உள்ள நிலையில், இது தொடர்பாக அரசிடமிருந்து எந்த அசைவும் இல்லை.

அதனால், கடந்த ஆண்டைப் போலவே கடைசி நேரம் வரை தாமதித்து, தொழிற்சங்கங்களுடன் பேச்சு நடத்தாமல், 10 சதவீதம் மட்டுமே மிகை ஊதியம் வழங்கப்படும் என்று அரசு தன்னிச்சையாக அறிவித்து விடுமோ? என்ற ஐயமும், கவலையும் தொழிலாளர்கள் மத்தியில் ஏற்பட்டிருக்கிறது.

கடந்த 20 ஆண்டுகளுக்கும் மேலாக ஒரே தொகையே மிகை ஊதியமாக வழங்கப்பட்டு வரும் நிலையில், விலைவாசி உயர்வைக் கருத்தில் கொண்டு நடப்பாண்டில் மிகை ஊதியத்தின் அளவை 25 சதவீதம் ஆக உயர்த்தி, உடனடியாக வழங்க தமிழக அரசு முன்வர வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.



## நயன்தாரா நடிக்கும் 75வது படம் 'அன்னபூரணி' அறிவிப்பு வெளியீடு

தென்னிந்திய மொழி திரைப்படங்களில் முன்னணி நடிகையாக வலம் வருபவர் நடிகை நயன்தாரா. இவர் முதல் முறையாக இந்தியில் அட்லி இயக்கத்தில் நடிகர் ஷாருக்கானுடன் இணைந்து நடித்த 'ஜவான்' திரைப்படம் ஆயிரம் கோடி ரூபாய்க்கு மேல் வசூல் செய்து சாதனை படைத்தது.

இந்த நிலையில் இயக்குனர் நிலேஷ் கிருஷ்ணா இயக்கத்தில் நயன்தாரா நடிக்கும் 75வது திரைப்படம் உருவாகி வருகிறது. இந்த படத்திற்கு 'அன்னபூரணி' என பெயரிடப்பட்டுள்ளது. இது தொடர்பான கிளிம்ப்ஸ் வீடியோ ஒன்றை படக்குழு வெளியிட்டுள்ளது.

இந்த படத்தில் நடிகர் ஜெய் கதாநாயகனாக நடிக்கிறார். தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம் ஆகிய மொழிகளில் தயாராகும் இந்த படத்தை ஜி ஸ்டூடியோஸ், டிரைடெண்ட் ஆர்ட்ஸ், நாட் ஸ்டூடியோஸ் இணைந்து தயாரிக்கின்றனர். இந்த படத்திற்கு தமன் இசையமைக்கிறார்.

## துருவ நட்சத்திரம் படத்தின் டிரைலர் வெளியானது




விக்ரம் நடிப்பில் மிகவும் எதிர்பார்க்கப்பட்ட படம் 'துருவ நட்சத்திரம்'. இந்த படத்தை கவுதம் மேனன் இயக்கியுள்ளார். இந்த படத்தில் கதாநாயகியாக ரிது வர்மா நடித்துள்ளார். இவர்களுடன் பார்த்திபன், ராதிகா சரத்குமார், சிம்ரன் உள்ளிட்ட பலர் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்துள்ளனர்.

இப்படத்தின் பணிகள் 2017ம் ஆண்டிலேயே தொடங்கப்பட்டு 2018ஆம் ஆண்டில் திரைக்கு கொண்டு வர திட்டமிட்டிருந்த நிலையில், சில காரணங்களால் தள்ளிப்போனது. இதையடுத்து சமீபத்தில் இந்த திரைப்படம் வருகிற நவம்பர் 24ம் தேதி வெளியாக உள்ளதாக படக்குழு அறிவித்திருந்தது.

இந்த நிலையில் 'துருவ நட்சத்திரம்' திரைப்படத்தின் டிரைலர் வெளியாகியுள்ளது. இந்த டிரைலர் தற்போது இணையத்தில் வைரலாகி வருகிறது.

## ராதிகா, முதன்முறையாக பிரெஞ்சு மொழி படத்தில் நடிக்க இருக்கிறார்



'கிழக்கே போகும் ரெயில்' படத்தின் மூலம் தமிழ் சினிமாவில் அறிமுகமான ராதிகா, 1980 மற்றும் 90 காலகட்டத்தில் முன்னணி கதாநாயகியாக திகழ்ந்தார். தெலுங்கு, மலையாளம், கன்னடம் மற்றும் இந்தியிலும் ஏராளமான படங்கள் நடித்துள்ளார்.

சினிமா தவிர சின்னத்திரையிலும் கோலோச்சி வருகிறார். 'சித்தி', 'அண்ணாமலை', 'வாணி ராணி', 'செல்லமே', 'அரசி' போன்ற பல மெகா சீரியல்களை தயாரித்து நடித்துள்ளார்.

தற்போது படங்களில் இளம் ஹீரோக்களுக்கு அம்மாவாகவும், குணச்சித்திர வேடங்களிலும் நடித்து வருகிறார்.

சினிமா பயணத்தில் 45 ஆண்டுகளை கடந்திருக்கும் ராதிகா, முதன்முறையாக பிரெஞ்சு மொழி படத்தில் நடிக்க இருக்கிறார். இதற்கான படப்பிடிப்புக்காக அவர் பிரான்ஸ் நாட்டுக்கு சென்றுள்ளார். இது திரில்லர் படம் என்று கூறப்படுகிறது.

படப்பிடிப்பின்போது எடுக்கப்பட்ட சில புகைப்படங்களை அவர் வெளியிட்டுள்ளார். அத்துடன், பிரெஞ்சு மொழி படத்தில் நடிக்க தன்னை ஊக்குவித்த தனது கணவர் சரத்குமாருக்கு நன்றியும் தெரிவித்துள்ளார். இந்த புகைப்படங்கள் இணையதளத்தில் வைரலாக பரவி வருகின்றன.

இதையொட்டி ராதிகாவுக்கு, திரையுலகினர் மற்றும் ரசிகர்கள் வாழ்த்துகளை தெரிவித்து வருகிறார்கள்.

## விவசாயியாக நடிக்கிறார் நடிகரான முத்தரசன்




இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் தமிழ் மாநில செயலாளர் முத்தரசன் 'அரிசி' என்ற படம் மூலம் நடிகராகி உள்ளார். இந்த படத்தில் அவர் விவசாயியாக நடிக்கிறார். அவரது மனைவியாக ரஷ்யா மாயன் நடிக்கிறார். இவர்களுடன் சிசர் மனோகர், கோவி இளங்கோ, ராஜா திருநாவுக்கரசு, அர்ஜுன்ராஜ், மகிமை ராஜ், வையகன், அன்பு ராணி, சுபா உள்ளிட்ட மேலும் பலர் நடிக்கின்றனர்.

இந்த படத்துக்கு இளையராஜா இசையமைக்கிறார். பி.சண்முகம் தயாரிக்க எஸ்.ஏ.விஜயகுமார் கதை, திரைக்கதை, வசனம் எழுதி டைரக்டு செய்கிறார்.

படக்குழுவினர் கூறும்போது, "அரிசி படம் முழுக்க விவசாய பின்னணியில் உருவாகிறது. அரிசி வெறும் உணவு தானியம் மட்டும் அல்ல. மனித வாழ்வியலின் உயிர்நாடி என்பதை இந்த தலைமுறைக்குக்கு எடுத்து சொல்வதே இந்த படம்.

இதில் விவசாயியாக நடிக்கும் முத்தரசன் பேசும் வசனங்கள் அர்த்தம் நிறைந்ததாக இருக்கும். விவசாயிகள் பலர் இதில் நடித்துள்ளனர்'' என்றனர்.

## நடிகை ராதாவின் மூத்த மகள் நிச்சயதார்த்தம்



தமிழ் திரையுலகில் 1980களில் முன்னணி கதாநாயகியாக வலம் வந்தவர் ராதா. இவரது மூத்த மகள் கார்த்திகா தமிழில் கோ படம் மூலம் கதாநாயகியாக அறிமுகமானார். வா டீல், அன்னக்கொடி, புறம்போக்கு என்கிற பொதுவுடமை ஆகிய படங்களிலும் நடித்துள்ளார்.

தெலுங்கு, மலையாள படங்களிலும் நடித்து இருக்கிறார். தனது தந்தையின் ஓட்டல் தொழிலையும் கவனித்து வருகிறார். இந்த நிலையில் கார்த்திகாவுக்கு நிச்சயதார்த்தம் நடந்து முடிந்துள்ளது.

வருங்கால கணவருக்கு கார்த்திகா மோதிரம் மாற்றும் நிச்சயதார்த்த புகைப்படத்தை நடிகை ராதா வலைத்தளத்தில் பகிர்ந்துள்ளார். அதில் ராதா வெளியிட்டுள்ள நெகிழ்ச்சியான பதிவில், "புதிய குடும்பத்துக்கு விரைவில் எங்கள் பெண்ணை கொடுப்பதற்காக நான் பெருமைப்படாமல் இருக்க முடியாது.

வெற்றிகரமான திருமண வாழ்க்கைக்கு கடவுள் உங்களை ஆசீர்வதிக்கட்டும். திருமணம் என்பது இரண்டு குடும்பங்கள் ஒன்று சேர்வது ஆகும். நான் மகிழ்ச்சியாக இருக்கிறேன். எந்த தாயும் விரும்பக்கூடிய சிறந்த மகள் கார்த்திகா.

என் இதயத்தில் கலவையான உணர்வுகள் உள்ளன. இந்த சிறந்த அனுபவத்துக்கு நன்றி" என்று கூறியுள்ளார்.

## படமாகும் ராமாயணம்; ராவணனாக நடிக்கும் யாஷ் சம்பளம் ரூ.150 கோடி



ராமாயணம் படத்தில் ராவணனாக நடிக்க 'கே.ஜி.எப்.' படத்தின் மூலம் உலக அளவில் கவனம் ஈர்த்த நடிகர் யாஷ் ஒப்பந்தமாகி இருக்கிறார். இதற்காக அவருக்கு ரூ.150 கோடி சம்பளம் நிர்ணயித்து இருப்பதாக தகவல் வெளியாகி உள்ளது.

ராமாயணம் கதையை மையமாக வைத்து ஏற்கனவே 'ஸ்ரீ ராமராஜ்ஜியம்', 'ஆதிபுருஷ்' உள்ளிட்ட பல படங்கள் வந்துள்ளன.

அடுத்து தமிழ், தெலுங்கு, இந்தி, மலையாளம், கன்னடம் உள்ளிட்ட மொழிகளில் 3டி தொழில்நுட்பத்தில் ராமாயணத்தை 3 பாகங்களாக எடுக்கப் போவதாகவும், ராமராக ரன்பீர் கபூரும், சீதையாக சாய் பல்லவியும் நடிக்கிறார்கள் என்றும் டைரக்டர் நித்திஷ் திவாரி அறிவித்து உள்ளார்.

இந்த படத்தில் ராவணனாக நடிக்க 'கே.ஜி.எப்.' படத்தின் மூலம் உலக அளவில் கவனம் ஈர்த்த நடிகர் யாஷ் ஒப்பந்தமாகி இருக்கிறார். இதற்காக அவருக்கு ரூ.150 கோடி சம்பளம் நிர்ணயித்து இருப்பதாக தகவல் வெளியாகி உள்ளது.

'கே.ஜி.எப்.2' படத்துக்கு பிறகு புதிய படங்கள் நடிப்பது குறித்த அறிவிப்பை யாஷ் வெளியிடவில்லை. 'கே.ஜி.எப்.' படத்தின் மூலம் கிடைத்த வரவேற்பை சரியாக பயன்படுத்தி பாலிவுட் சினிமாவில் நுழைய யாஷ் திட்டமிட்டிருந்தார்.

அந்தவகையில்தான் நித்திஷ் திவாரியின் 'ராமாயணம்' படத்தில் நடிக்க ஒப்புக்கொண்டிருக்கிறார். ராவணன் வேடத்தில் யாஷ் நடிக்க இருப்பது அவரது ரசிகர்களை பரபரப்பு கொள்ள செய்துள்ளது. யாஷின் நடிப்பில் பெரும் எதிர்பார்ப்புக்கிடையே 'கே.ஜி.எப்.3' படம் 2025ம் ஆண்டு வெளியாக இருக்கிறது.

## பிரெஞ்சு ஓபன் பேட்மிண்டன்: பி.வி.சிந்து 2வது சுற்றுக்கு முன்னேற்றம்



பிரெஞ்சு ஓபன் பேட்மிண்டன் போட்டி அங்குள்ள ரென்னிஸ் நகரில் நேற்று தொடங்கியது. இதில் பெண்கள் ஒற்றையர் பிரிவின் முதல் சுற்று ஆட்டம் ஒன்றில் முன்னாள் உலக சாம்பியனான இந்திய வீராங்கனை பி.வி.சிந்து 1221, 2118, 2115 என்ற செட் கணக்கில் இந்தோனேசியாவின் கிரிகோரியா மரிஸ்கோ துன்ஜூங்கை வீழ்த்தி 2வது சுற்றுக்கு முன்னேறினார்.

இதேபோல் ஆண்கள் இரட்டையர் பிரிவின் முதல் சுற்றில் உலக தரவரிசையில் முதலிடத்தில் இருக்கும் இந்தியாவின் சாத்விக் சாய்ராஜ் ரங்கி ரெட்டிசிராக் ஷெட்டி ஜோடி 2113, 2113 என்ற நேர்செட்டில் பிரான்சின் லூகாஸ் கோர்வீரோனன் லபார் இணையை தோற்கடித்து 2வது சுற்றை எட்டியது.

## தென் மண்டல சப்ஜீனியர் கைப்பந்து போட்டி: கர்நாடகா, ஆந்திரா அணிகள் சாம்பியன்




தமிழ்நாடு ஆக்கி அமைப்பு சார்பில் முதலாவது தென்மண்டல சப்ஜூனியர் ஆக்கி சாம்பியன்ஷிப் போட்டி சென்னை எழும்பூரில் உள்ள மேயர் ராதாகிருஷ்ணன் ஸ்டேடியத்தில் நடந்தது. இதில் நேற்று நடந்த ஆண்கள் பிரிவு இறுதி ஆட்டத்தில் கர்நாடக அணி 32 என்ற கோல் கணக்கில் தமிழகத்தை வீழ்த்தி சாம்பியன் பட்டத்தை தனதாக்கியது.

கர்நாடக அணியில் ஜாஷன் தம்மையா (9வது நிமிடம்), காக்ஹன்டாகி ரோகித் (29வது நிமிடம்), நிஷாந்த் (57வது நிமிடம்), தமிழக அணியில் கமலேஷ் (31வது நிமிடம்), சுகுமார் (35வது நிமிடம்) ஆகியோர் கோல போட்டனர். முன்னதாக நடந்த 3வது இடத்துக்கான ஆட்டத்தில் ஆந்திரா 42 என்ற கோல் கணக்கில் புதுச்சேரியை தோற்கடித்தது.

பெண்கள் பிரிவு இறுதிப்போட்டியில் ஆந்திரா 50 என்ற கோல் கணக்கில் தமிழகத்தை தோற்கடித்து சாம்பியன் பட்டத்தை கைப்பற்றியது. ஆந்திர அணியில் ஸ்ரீவித்யா 3 கோலும் (7வது, 20வது, 23வது நிமிடம்), பதன் முஜியா பெகன் (35வது நிமிடம்), குப்பா துளசி (45வது நிமிடம்) தலா ஒரு கோலும் அடித்தனர். இதன் 3வது இடத்துக்கான ஆட்டத்தில் கர்நாடகா 32 என்ற கோல் கணக்கில் கேரளாவை சாய்த்தது. பரிசளிப்பு விழாவில் தயாநிதி மாறன் எம்.பி. சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு வெற்றி பெற்ற அணிகளுக்கு பதக்கங்களை வழங்கினார். நோவாலைப் பேஸ் நிறுவன நிர்வாக இயக்குனர் ஆர்.செந்தில் குமார், ஆக்கி இந்தியாவின் பொருளாளர் சேகர் மனோகரன், தமிழ்நாடு ஆக்கி அமைப்பின் பொதுச்செயலாளர் பி.செந்தில்குமார் உள்பட பலர் விழாவில் கலந்து கொண்டனர்.

## ஆசிய துப்பாக்கி சுடுதல் போட்டி: இந்திய வீரர் சரப்ஜோத் சிங் வெண்கலம் வென்றார்



ஆசிய துப்பாக்கி சுடுதல் சாம்பியன்ஷிப் போட்டி தென்கொரியாவின் சாங்வோன் நகரில் நடந்து வருகிறது. இதில் நேற்று நடந்த ஆண்களுக்கான 10 மீட்டர் ஏர்பிஸ்டல் பந்தயத்தில் இந்திய வீரர் சரப்ஜோத் சிங் (221.1 புள்ளி) வெண்கலப்பதக்கம் வென்றார். இதன் மூலம் அவர் அடுத்த ஆண்டு பாரீசில் நடைபெறும் ஒலிம்பிக் போட்டிக்கான இடத்தை உறுதி செய்தார். இதில் சீன வீராங்கனைகள் ஜாங் யிபான் (243.7 புள்ளி) தங்கப்பதக்கமும், லூ ஜின்யாவ் (242.1 புள்ளி) வெள்ளிப்பதக்கமும் கைப்பற்றினர்.

## பிரெஞ்சு ஓபன் பேட்மிண்டன்: இந்தியாவின் சாத்விக் சிராக் ஜோடி 2வது சுற்றுக்கு முன்னேற்றம்




பிரெஞ்ச் ஓபன் சூப்பர் 750 பேட்மிண்டன் தொடரானது பிரான்சு நாட்டில் நடைபெற்று வருகிறது. இதில் செவ்வாய்கிழமை நடைபெற்ற போட்டியில் உலகின் நம்பர் 1 ஜோடியான சாத்விக் சாய்ராஜ் ரங்கிரெட்டி மற்றும் சிராக் ஷெட்டி ஜோடியானது தரவரிசையில் 34 வது இடத்தில் உள்ள லூகாஸ் கோர்வி மற்றும் ரோனன் லாபர் ஜோடியுடன் மோதியது.

மொத்தம் 35 நிமிடங்களுக்கு நீடித்த இந்த போட்டியில் 2113, 2113 என்ற நேர் செட்களில் இந்திய ஜோடி வெற்றி பெற்றது. இந்த வெற்றியின் மூலம் அடுத்த சுற்றுக்கு சாத்விக் சாய்ராஜ் ரங்கிரெட்டி மற்றும் சிராக் ஷெட்டி ஜோடி முன்னேறியது.

இந்த ஜோடி அடுத்ததாக மூன்று முறை உலக சாம்பியனான இந்தோனேசியாவின் முகமது அஹ்சன் மற்றும் ஹென்ட்ரா செட்டியவான் ஆகியோரை சந்திக்கின்றனர்.

## ஆசிய பாரா விளையாட்டு போட்டிகள்: ஈட்டி எறிதல் போட்டியில் தங்கம் வென்றார் இந்திய வீரர் சுமித் அன்டில்



ஆசிய பாரா விளையாட்டு போட்டிகள் சீனாவில் நடைபெற்று வருகிறது. இதில் இன்று நடைபெற்ற ஆண்களுக்கான F64 ஈட்டி எறிதல் பிரிவில் பங்கேற்ற இந்திய வீரர் சுமித் அன்டில் 73.29 மீ தூரம் எறிந்து தங்கப்பதக்கத்தை கைப்பற்றினார். இதே பிரிவில் மற்றொரு இந்திய வீரர் புஷ்பேந்திர சிங் 62.06 மீ தூரம் எறிந்து வெண்கலப்பதக்கத்தை கைப்பற்றினார். தற்போது வரை இந்திய அணி 10 தங்கம், 12 வெள்ளி, 17 வெண்கலம் வென்று 39 பதக்கங்களுடன் புள்ளிப்பட்டியலில் 5வது இடத்தில் உள்ளது.

## உலகக் கோப்பை கிரிக்கெட்: 309 ரன்கள் வித்தியாசத்தில் நெதர்லாந்தை வீழ்த்தி ஆஸ்திரேலியா அபார வெற்றி



உலகக் கோப்பை கிரிக்கெட் தொடரில் இன்று நடைபெற்ற 24வது லீக் ஆட்டத்தில் ஆஸ்திரேலியா நெதர்லாந்து அணிகள் மோதின. இப்போட்டியில் டாஸ் வென்ற ஆஸ்திரேலியா பேட்டிங் தேர்வு செய்தது. இதனையடுத்து, டேவிட் வார்னர், மார்ஷ் தொடக்க வீரர்களாக களமிறங்கினர். மார்ஷ் 9 ரன்னில் ஆட்டமிழந்த நிலையில் ஸ்டீவ் ஸ்மித் உடன் ஜோடி சேர்ந்த டேவிட் வார்னர் அதிரடி ஆட்டத்தை வெளிப்படுத்தினார். பொறுப்புடன் ஆடிய ஸ்மித் 71 ரன்னில் ஆட்டமிழந்தார். அடுத்துவந்த லபுஷேன் 62 ரன்னிலும், ஜோஷ் 14 ரன்னிலும் அவுட் ஆகினர். ஆனால், அதிரடி ஆட்டத்தை வெளிப்படுத்திய டேவிட் வார்னர் 93 பந்தில் 104 ரன்கள் குவித்து அவுட் ஆனார். அடுத்துவந்த மேக்ஸ்வெல் நெதர்லாந்து பந்துவீச்சை பவுண்டரி, சிக்சர்களாக பறக்கவிட்டார். அவர் 40 பந்துகளில் சதம் விளாசினார். இறுதியில் 44 பந்துகளில் 106 ரன்கள் விளாசிய மேக்ஸ்வெல் கேட்ச் கொடுத்து அவுட்டானார். இந்த நிலையில் ஆஸ்திரேலியா அணி 50 ஓவர்கள் முடிவில் 8 விக்கெட் இழப்பிற்கு 399 ரன்கள் குவித்தது. இதையடுத்து 400 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இமாலய இலக்குடன் நெதர்லாந்து அணி களமிறங்கியது. அந்த அணி 21 ஓவர்களில் 90 ரன்கள் எடுத்திருந்த நிலையில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்தது. இதையடுத்து இந்த போட்டியில் 309 ரன்கள் வித்தியாசத்தில் ஆஸ்திரேலியா அபார வெற்றி பெற்றது.

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.